The Hindu / 
தி இந்து தமிழ்

07 NOV 2025

# Pondicherry University V-C honoured

**The Hindu Bureau**
PUDUCHERRY

Pondicherry University Vice-Chancellor P. Prakash Babu has been honoured with 'The Life Time Achievement Award' by the Bioinformatics and Drug Discovery Society (BIDDS), in recognition of his outstanding contributions to academia and scientific leadership and research in the area of neuroscience and drug discovery.



Pondicherry University Vice-Chancellor P. Prakash Babu being presented the Lifetime Achievement Award for contributions to advancement of neuroscience at a recent event at the institution.

The award was presented during the recently-concluded 'Global Summit on Innovative Drug Design, Discovery and Translational Research,' organised by the Department of Bioinformatics, Pondicherry University and BIDDS.

In his acceptance speech, Mr. Babu focused on how the Blood-Brain Barrier (BBB) protects the Central Nervous System from infections and toxins but is disrupted during diseases and injuries. The BBB breakdown leads to oedema, inflammation, and neurodegeneration. In conditions like stroke and cerebral malaria, BBB damage allows infiltration of cytotoxic T-lymphocytes and toxins and can lead to neuronal death, oxidative stress, and altered dendritic spine morphology affecting cognition.

Adjunct therapy with artemether and polycyclitol derivatives mitigated neurodegeneration and improved cognition in experimental models, he added.

Dinakar M. Salunke, formerly Director of ICGEB, New Delhi and Sanjeev Kumar Singh, Secretary General of BIDDS were the chief speakers at the conference.

R. Krishna, Head, Department of Bioinformatics spoke, followed by the release of conference souvenir and a book 'Novel Approaches to overcome Cancer Resistance to Conventional Therapies,' edited by A. Dinakara Rao and V. Amouda of Department of Bioinformatics.

Basant Kumar Tiwary, Dean (in-charge), School of Life Science and S. Mohane Coumar, organising secretary, also participated.

Dinamalar / தினமலர்

7 Nov 2025

# துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணனுடன் புதுச்சேரி பல்கலை., துணைவேந்தர் சந்திப்பு

**புதுச்சேரி, நவ. 7–**
துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணனை புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு, புதுடில்லியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்து பேசினார்.

அப்போது, பல்கலைக் கழகத்தின் வளர்ச்சி, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நீடித்த சாதனைகள் பற்றிய விரிவான விவரங்களை துணை வேந்தர் எடுத்துரைத்தார்.

குறிப்பாக கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைகளில் பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான சிறப்பை எடுத்துரைத்தார்.

பல்கலைக்கழகத்தின் முயற்சிகளைப் பாராட்டிய துணை ஜனாதிபதி, புதுச்சேரி பல்கலைக் கழக வளர்ச்சிக்கு ஆலோசனைகளை வழங்கினார். வளர்ந்து வரும் தேசிய



■ துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணனை புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு, புதுடில்லியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்து பேசினார்.

மற்றும் உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப புதிய மற்றும் புதுமையான கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும். முழுமையான மாணவர் வளர்ச்சியை வளர்ப்பதற்கு நவீன விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும்.

ஆராய்ச்சி, புதுமை மற்றும் சமூக ஈடுபாடு மூலம் வளர்ந்த பாரதம்–2047 என்ற தொலைநோக்குப் பார்வையை நோக்கி நிறுவன பங்களிப்பை மேம்படுத்த வேண்டும் என, அறிவுரை வழங்கினார். மேலும், மருத்துவம் மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த திட்டங்கள் துவங்க வேண்டும். வளாகங்களில் உள்கட்டமைப்பை விரிவுபடுத்த வேண்டும் என, அறிவுறுத்தினார்.

அப்போது துணை வேந்தர் பிரகாஷ் பாபு, தொலைநோக்கு பார்வை கொண்ட இந்த ஆலோசனைகள் நடைமுறைப் படுத்தப்படும்.

உயர்கல்வி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் தொடர்ந்து சிறந்து விளங்குவதிலும் பல்கலைக்கழகம் உறுதி பூண்டுள்ளது என, துணை ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

The Hindu / தி இந்து தமிழ்

7 NOV 2025

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்தி

# வேலைவாய்ப்பு சார்ந்த புதிய படிப்புகளை தொடங்க வேண்டும்

## குடியரசுத் துணைத்தலைவர் துணைவேந்தருக்கு அறிவுறுத்தல்

புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் உள்கட்ட மைப்பை மேம்படுத்தி, வேலைவாய்ப்பு சார்ந்த புதிய படிப்புகளை தொடங்க வேண்டும் என்று அதன் துணைவேந்தருக்கு குடியரசுத் துணைத்தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழக வேந்தரும், குடியரசுத் துணைத் தலைவருமான சி.பி. ராதாகிருஷ்ணனை டெல்லியில் நேற்று புதுச்சேரி மத்திய பல் கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ்பாபு சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளை அவர் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து குடியரசுத் துணைத்தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், வளர்ந்து வரும் தேசிய மற்றும் உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப புதிய கல்வித்திட்டங்களை அறிமுகம் செய்ய வேண்டும். நவீன விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும். மருத்துவம், வேலைவாய்ப்பு சார்ந்த புதிய படிப்புகளை தொடங்க வேண்டும். ஆராய்ச்சி, சமூக ஈடுபாடு மூலம் வளர்ச்சியடைந்த பாரதம் 2047 தொலைநோக்கு பார்வைக்கு நிறுவன பங்களிப்பை மேம்படுத்த வேண்டும். பல்கலைக்கழக மெயின் வளாகம் மற்றும் கிளை வளாகங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தி ஆலோசனை தந்துள்ளதாக பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



டெல்லியில் குடியரசுத் துணைத்தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனை சந்தித்த புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ்பாபு.

Dinamani / தினமணி

07 NOV 2025

★★★ வெள்ளிக்கிழமை, 7 நவம்பர் 2025

# புதுவை மத்தியப் பல்கலை.யில் வேலைவாய்ப்பளிக்கும் புதிய படிப்புகள்

## குடியரசுத் துணைத் தலைவர் அறிவுறுத்தல்



குடியரசுத் துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனை தில்லியில் வியாழக்கிழமை சந்தித்த புதுவை மத்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி.பிரகாஷ்பாபு.

**புதுச்சேரி, நவ. 6:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பளிக்கும் புதிய படிப்புகளைத் தொடங்குமாறு குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தியுள்ளார்.

தில்லியில் குடியரசு துணைத் தலைவரும், இப் பல்கலைக் கழகத்தின் வேந்தருமான சி.பி.ராதாகிருஷ்ணனை புதுவை மத்திய பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி.பிரகாஷ்பாபு வியாழக்கிழமை சந்தித்துப் பேசினார்.

இது குறித்து பல்கலைக் கழக நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

குடியரசுத் துணைத் தலைவருடனான இந்தச் சந்திப்பின்போது 40 ஆண்டுகளான புதுவை மத்திய பல்கலைக் கழகத்தின் வளர்ச்சி, உள்கட்டமைப்புகள், சாதனைகள் குறித்து துணைவேந்தர் எடுத்துரைத்தார்.

மேலும், இப்பல்கலைக்கழகம் நாட்டின் உயர்கல்வித் துறையில் ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகளில் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளதையும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதற்கு குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், இப் பல்கலைக் கழகத்தின் முயற்சிகளைப் பாராட்டினார். உலக அளவிலும், தேசிய அளவிலும் தேவைப்படும் புதிய மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான படிப்புகளை அறிமுகம் செய்யுமாறு அறிவுறுத்தினார்.

மேலும், வளர்ந்த பாரதம் -2047 குறிக்கோளை அடையும் வகையில் ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், சமூகப் பங்களிப்புடன் இருக்குமாறு அவர் யோசனை வழங்கினார். மருத்துவம் மற்றும் வேலைவாய்ப்புகளை அளிக்கும் வகையில் புதிய படிப்புகளைத் தொடங்க அறிவுரை வழங்கினார்.

நாட்டைக் கட்டி எழுப்புவதிலும் உயர்கல்வியிலும் முக்கியத்துவம் அளிக்கும் குடியரசு துணைத் தலைவரின் யோசனைகளை அமல்படுத்துவதில் உறுதியாக இருப்பதாக துணைவேந்தர் பேராசிரியர் பி.பிரகாஷ் பாபு உறுதியளித்தார்.

Dinakaran /
தினகரன்

07 NOV 2025

# துணை ஜனாதிபதியுடன், புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் சந்திப்பு



புது டெல்லியில் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனை புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு நேரில் சந்தித்து நினைவு பரிசு வழங்கினார்.

புதுச்சேரி, நவ. 7: புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு, இந்திய குடியரசு துணை தலைவரும், புதுவை பல்கலைக்கழக வேந்தருமான சி.பி.ராதாகிருஷ்ணனை புதுடெல்லியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நேரில் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, கடந்த 4 தசாப்தங்களாக பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நீடித்த சாதனைகள் பற்றிய விரிவான விவரங்களை துணைவேந்தர் வழங்கினார். கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைகளில் பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான சிறப்பு, நாட்டில் உயர்கல்வியில் முன்னணி பல்கலைக்கழகமாக அதன் நிலையை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

மேலும், பேராசிரியர் பிரகாஷ்பாபு, பல்கலைக்கழகத்தின் 40 ஆண்டுகால பயணத்தில் சாதித்த முக்கிய மைல்கற்கள், இடைநிலை ஆராய்ச்சியில் முன்னேற்றங்கள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு மற்றும் கல்வி மற்றும் அவுட்ரீச் மூலம் சமூக வளர்ச்சிக்கான பங்களிப்புகள் உள்ளிட்டவற்றை குடியரசு துணைத்தலைவரிடம் முன் வைத்தார்.

இதையடுத்து பல்கலைக்கழகத்தின் முயற்சிகளை பாராட்டி, அதன் எதிர்கால வளர்ச்சிக்கு மதிப்புமிக்க ஆலோசனைகளை குடியரசு துணை தலைவர் வழங்கினார். மேலும் மருத்துவம் மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த திட்டங்கள் உள்ளிட்ட புதிய திட்டங்களை தொடங்கவும், பிரதான வளாகங்கள் மற்றும் செயற்கைக்கோள் வளாகங்களில் உள்கட்டமைப்பை விரிவுபடுத்த வேண்டும் எனவும் குடியரசு துணைத்தலைவரும், புதுவை பல்கலைக்கழக வேந்தருக்கு அறிவுறுத்தினார்.

Malai Malar /
மாலை மலர்

7 NOV 2025



டெல்லியில் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனை புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ்பாபு சந்தித்த காட்சி.

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# வேலை வாய்ப்பளிக்கும் புதிய படிப்புகளை தொடங்க வேண்டும்

## துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவுரை

புதுச்சேரி,நவ.7—

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர் பிரகாஷ்பாபு டெல்லியில் துணை ஜனாதிபதியும், புதுவை பல்கலைக் கழகத்தின் வேந்தருமான சி.பி.ராதாகிருஷ்ணனை சந்தித்தார்.

அப்போது புதுவை மத்திய பல்கலைக் கழகத்தின் வளர்ச்சி, உள்கட்டமைப்புகள், சாதனைகள் குறித்து துணைவேந்தர் எடுத்துரைத்தார். மேலும், நம் நாட்டின் உயர்கல்வித் துறையில் ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகளில் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளதையும் கூறினார்.

### புதிய படிப்புகள்

துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் பல்கலைக் கழகத்தின் முயற்சிகளை பாராட்டினார். தொடர்ந்து உலக அளவிலும், தேசிய அளவிலும் தேவைப்படும் புதிய மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான படிப்புகளை அறிமுகம் செய்யுமாறு அறிவுறுத்தினார்.

மேலும் வளர்ந்த பாரதம் 2047 குறிக்கோளை அடையும் வகையில் ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், சமூக பங்களிப்புடன் செயல்பட அவர் ஆலோசனை வழங்கினார். மருத்துவம் மற்றும் வேலை வாய்ப்புகளை அளிக்கும் வகையில் புதிய படிப்புகளைத் தொடங்குமாறும் அறிவுரை கூறினார்.

துணை ஜனாதிபதியின் ஆலோசனைகளை அமல்படுத்துவதில் உறுதியாக இருப்பதாக துணைவேந்தர் பிரகாஷ் பாபு உறுதியளித்தார்.